29—

அடிப்படை வசதிகள்

***2677—திருமதி எஸ். விஜயதரணி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதி, சிதறால் மலைக்கோவிலுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட மேல்புறம் ஊராட்சி ஒன்றியத்தில், வெள்ளாங்கோடு ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள சிதறால் மலைக்கோவிலில் மத்திய அரசு ஜைன சுற்றுலாச் சுற்று திட்டத்தின்கீழ் சுற்றுலாத் துறைமூலம் ரூ.23.00 இலட்சம் மற்றும் மாவட்ட ஆட்சியர் சேமிப்பு நிதியிலிருந்து ரூ.30.00 இலட்சம் ஆகமொத்தம் ரூ.53.00 இலட்சம் செலவில் பல்வேறு அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு சுற்றுலாப் பணிகள் பயன்பாட்டில் உள்ளன. அடிப்படை வசதிகள் அனைத்தும் மலைக்கோவிலின் அடிவாரத்தில் அமைக்கப்பட்டுள்ளன என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

முற்பகல் 11–05

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட சிதறால் மலைக்கோவிலில் 1,650 ஆண்டுகளுக்கு முந்தைய சமண மத நிறுவனர் மகாவீரர் அவர்களின் சிலை நிறுவப்பட்டு, தென்னகத்தில் சிறந்த சுற்றுலாத் தலமாக விளங்கியது. இந்த மலை*

2017 ஜூன் 16]

36 ஏக்கர் பரப்பளவில் மூன்று குளங்களுடன் இயற்கை எழில் மிகுந்த வனப் பரப்பும், வளமும் நிறைந்ததாக உள்ளது. இரப்பர் தோட்டங்களுக்கு நடுவில் இரம்மியமாகக் காட்சி அளிக்கும் சிறந்த சுற்றுலாத் தலமாகும். 2010 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை சுற்றுலா விழா இங்கு சிறப்பாக நடைபெற்றது. கடந்த ஐந்து ஆண்டுகளாக சுற்றுலாத் திருவிழா இங்கு நடைபெறவில்லை. சிறந்த சுற்றுலாத் தலமாக மேம்பாடு செய்திட வேண்டுமானால், மலை உச்சி வரை சாலை வசதி ஏற்படுத்தப்பட வேண்டும். இங்கு சாலை வசதியே இல்லாததால், பக்தர்கள் மிகுந்த சிரமப்பட்டு மலையின்மேல் செல்ல வேண்டியுள்ளது. சுற்றுலாப் பயணிகளுக்கு தங்கும் வசதியும், கழிவறை வசதியும் ஏற்படுத்தித் தர வேண்டும். மேலும், மலையின் அடிவாரத்தில் உள்ள கான்கிரீட் சாலை என்னுடைய சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து போடப்பட்டுள்ளது. அங்கு மின் வசதியை உருவாக்கி, மலைக்கு நடந்து செல்ல வசதியாக நடைபாதையில் மின் விளக்குகள் அமைத்திட வேண்டும். கடல் மட்டத்திலிருந்து சுமார் 1,000 அடிக்கு மேல் இந்த சிதறால் மலைக்கோவில் அமைந்திருப்பதால், அங்கு Rope Car *வசதி ஏற்படுத்தினால் சுற்றுலாப் பயணிகளுக்கு வசதியாக இருக்கும். அங்கிருந்து மேற்கு நோக்கிப் பார்க்க ஒரு* Telescope *நிறுவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்குண்டான ஆய்வுகள் ஏற்கெனவே செய்யப்பட்டுள்ளன. அங்கு* Telescope *நிறுவினால், கடல் மட்டத்திலிருந்து 1,000 அடிக்கு மேலிருந்து கடல் பரப்பு, கடலில் கப்பல் செல்லும் அழகு போன்ற காட்சிகளைக் காண்பதற்கும், இரசிப்பதற்கும் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.*

கன்னியாகுமரியிலிருந்து சுசீந்திரம், முட்டம், பத்மநாபபுரம், திற்பரப்பு அருவி, சிற்றாறு அணைக்கட்டு, சிதறால் மலைக்கோவில், அழகிய தேங்காய்பட்டணம் கடற்கரை ஆகிய இடங்களை இணைக்கக்கூடிய அளவில், இவற்றையெல்லாம் சுற்றுலாப் பயணிகள் பார்த்து இரசிக்கக்கூடிய வகையில் சுற்றுலா சிறப்புப் பேருந்து இயக்க அரசு முன்வர வேண்டுமென்று தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் முதல் இடத்திற்குக் கொண்டுவர எடுத்த ஆற்றல் மிக்க*

நடவடிக்கைகளினால், மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் நல்லாசியுடன், 2014 ஆம் ஆண்டைத் தொடர்ந்து, 2015 ஆம் ஆண்டிலும், அதைத் தொடர்ந்து 2016 ஆம் ஆண்டிலும், தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக நமது மாநிலம் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையிலும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையிலும், இந்தியாவிலேயே முதல் இடத்தினை மூன்றாவது முறையாகப் பெற்று சரித்திர சாதனைப் பெற்றிருக்கின்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இனிவரும் காலங்களில் இப்பகுதிக்கு வருகை தருகின்ற சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில், கூடுதல் அடிப்படை வசதிகள் என்னென்ன வேண்டுமென்று ஆய்வுசெய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் தேவைப்படின் அதற்கான கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரையைப் பெற்று, அரசின் நிதிநிலைமைக்கேற்ப, விளவங்கோட்டில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் கோரப்படும் அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து தர ஆவன செய்யப்படும் என்பதை இந்த மாமன்றத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. கன்னியாகுமரி மாவட்டம், இயற்கையின் அழகு மிளிரக்கூடிய ஓர் இடம். கடவுளின் தேசம் என்று இந்த மாவட்டத்தைக் கூற முடியும். பார்ப்பவர்களின் கண்களுக்கு கொள்ளை அழகை அள்ளிக் கொடுக்கும் இரப்பர் தோட்டங்கள், இயற்கை அருவிகள், மலையோரங்களிலுள்ள தேன் சேகரிக்கும் கூடுகள், புகழ்பெற்ற மார்த்தாண்டம் தேன், வற்றாத ஜீவ நதியான குழித்துறை தாமிரபரணி, கடையாலுமூடு இரப்பர் தோட்டங்கள், தென்னை மரங்கள் நிறைந்த ஈத்தாமொழி என செழிப்பான பகுதிகள் உளளன. தக்கலை அருகிலுள்ள புகழ்பெற்ற புலியூர்குறிச்சியிலுள்ள உதயகிரி கோட்டையை சிறந்த சுற்றுலாத் தலமாக மாற்றிட வேண்டும். மான் பூங்காவின் தரத்தை மேலும் உயர்த்த வேண்டும். உதயகிரி

2017 ஜூன் 16]

கோட்டைக்கு கூடுதல் நிதியொதுக்கீடு செய்து சுற்றுலாத் தலமாக வகை மாற்றம் செய்திட வேண்டுமென்று தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறை, தமிழ்நாட்டிலுள்ள எந்த ஒரு குறிப்பிட்ட இடத்தையும் சுற்றுலாத்தலம் என அறிவிப்பதில்லை. இருப்பினும், ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மற்றும் அவ்விடத்தின் முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரை, கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடுகள் பெறப்பட்டு, நிதி நிலைமைக்கேற்ப, தக்கதொரு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இம்மாமன்றத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ள அனைத்து கோரிக்கைகளும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான பார்வைக்குக் கொண்டு செல்லப்படும் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

30—

பேருந்து வசதி

***5783—திரு. சே. கருணாஸ்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாடனை தொகுதி, ஆண்டாவூரணி, அதவத்தூர், செங்காணம், அடம்பூர் வரை புதிய வழித்தடங்களில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?